# Indian IAS Academy

**"TNPSC CCSE Group - IV & VAO**

## Test -5 - பொது தமிழ்

1."வள்ளிதழ்" வாடாத வானோரும் வானவன் வில்லெழுதி வாழ்வார் விசும்பு" இத்தொடரில் சிறப்பிக்கப்படும் அரசன் யார்?

[A] பாண்டியன் [B] சோழன்
[C] சேரன் [D] பல்லவன்

2.சரியானதைக் கண்டறி?

[A] மல்லல் நெடுமதில் -வினைத்தொகை
[B] ஈர்த்து - எடை
[C] மருப்பு - எழுத்தாணி
[D] மொய்யிலை-மொய்+இலை

3. முத்தொள்ளாயிரம் பற்றி தவறானதைக் கண்டறி.

[A] புறத்திரட்டு என்னும் நூல் வாயிலாக 108 வெண்பாவும், பழைய உரை நூல்களில் மேற்கோள்களாக 22 வெண் பாவும் கிடைத்துள்ளன.
[B] மூவேந்தர்களைப்பற்றிய மூன்று தொள்ளா யிரம் பாடல்களைக் கொண்டது.
[C] இந்நூல் முழுமையாக கிடைத்துள்ளது.
[D] மூவேந்தர்களின் ஆட்சிச் சிறப்பு, படைச் சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை முத்தொள்ளாயிரம் பாடல்கள் விளக்குகின்றன.

4. 'உகு' என்பதன் பொருள் யாது?

[A] புகுதல் [B] பொழிந்த
[C] மேகம் [D] நிலவு

5.'வியர்த்தவியர்வன்றோ' என்பதன் இலக்கணக் குறிப்புத் தருக?

[A] வினையெச்சம் [B] வினைத்தொகை
[D] பண்புத்தொகை [D] பெயரெச்சம்

6. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி" என்றுக் கூறிய நூல் யாது?

[A] கலிங்கத்துப்பரணி
[B] நன்னூல்
[C] பன்னிரு பாட்டியல்
[D] தக்கயாகப்பரணி

7. ஜெயங்கொண்டார் பற்றிய சரியானக்கூற்றினைத் தேர்வு செய்க.

[A] பரணிக்கோர் செயங்கொண்டார் என அழகிய சொக்கநாதர் பாராட்டியுள்ளார்.
[B] தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரினர்.
[C] இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் அவைகளப் புலவர்
[D] இசையாயிரம், உலாமடல் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

8. எத்தனை தாழிசைகள் கலிங்கத்துப் பரணியில் உள்ளன?

[A] 570 [B] 599 [C] 508 [D] 507

9. "அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு) ஐந்துசால்(பு) ஊன்றிய தூண்" இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி எது?

[A] உவமையணி
[B] எடுத்துக்காட்டு உவமையணி
[C] ஏகதேச உருவக அணி
[D] உருவக அணி

10. தவறாகப் பொருந்தியுள்ளதைத் தேர்வு செய்க.

[A] மாற்றார் - பகைவர்
[B] துலையல்லார் - ஆற்றலில் குறைந்தவர்
[C] ஆழி-கடல்
[D] ஊழி-கடல்

11. "உடன் பிறப்பாகி உறுதுணை புரியும் மகளாய்ப் பிறந்து சேவையில் மகிழும்" எனப் பெண்மையைப் போற்றியவர் யார்?

[A] தமிழ்த்தென்றல் [B] மாக்கவி
[C] புரட்சிக்கவி [D] காந்தியக் கவிஞர்

12. காந்தியக் கவிஞரைப் பற்றிய சரியானக் கூற்றினைக் கண்டறிக?

[A] சேலம் மாவட்டம் மோகனூரில் பிறந்தவர்
[B] பெற்றோர் - வெங்கடராமன் - அம்மணி
[C] தமிழக அரசின் இரண்டாவது அரசவைக் கவிஞர்
[D] நடுவணரசு பத்மஸ்ரீ விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

13. "தென்தமிழ்த் தெய்வப் பரணி" என கலிங்கத்துப் பரணியை புகழ்ந்தவர் யார்?

[A] பேரறிஞர் அண்ணா [B] கம்பர்
[C] ஒட்டக்கூத்தர் [D] புகழேந்தி

14. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி" எனத் தமிழினத்தின் தொன்மையைக் கூறும் நூல் எது?

[A] பன்னிருபாட்டியல்
[B] புறப்பொருள் வெண்பாமாலை



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

[C] கம்பராமாயணம்
[D] புறநானூறு

15. தில்லையாடி வள்ளியம்மையின் தந்தை இந்தியாவில் செய்தத்தொழில் என்ன?
[A] விவசாயி [B] தரகர்
[C] நெசவாளி [D] வாணிகம் செய்பவர்

16. எத்தனை நாடுகளில் தமிழினம் பரவியுள்ளது?
[A] 150 [B] 151 [C] 152 [D] 154

17. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு _____ல் உள்ளது?
[A] சிலப்பத்திகாரம் [B] மணிமேகலை
[C] வளையாபதி [D] குண்டலகேசி

18. ரீயூனியன் தீவு எந்த நாட்டிற்குச் சொந்தமானது?
[A] பிரான்சு [B] அயர்லாந்து
[C] இங்கிலாந்து [D] நெதர்லாந்து

19. பின்வரும் எந்த நாட்டில் தமிழ் ஒரு பாடமாக இல்லை?
[A] சிங்கப்பூர் [B] மலேசியா
[C] பிரிட்டன் [D] பிரேசில்

20.பின்வரும் எந்த நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக இல்லை?
[A] இலங்கை [B] சிங்கப்பூர்
[C] மொரிசியஸ் [D] மலேசியா

21.பின்வரும் எந்த நாடுகளில் தமிழர்கள் குடியரசு தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்?
[A] சிங்கப்பூர் , மலேசியா
[B] சிங்கப்பூர், மொரிசியசு
[C] இலங்கை, மலேசியா
[D] இலங்கை, சிங்கப்பூர்

22. திரு.வி.க. பற்றிய தவறானக் கூற்றைத் தேர்ந்தெடுக்க.
[A] கதிரைவேலர் என்பாரிடம் தமிழ்பயின்றார்
[B] திரு.வி.க வுக்கு வாய்த்த மொழிநடை 'மலை' எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்து உள்ளது என தெ.பொ.மீ கூறியுள்ளார்.
[C] முருகன் அருள்வேட்டல், மார்க்சியமும் காந்தியமும் முதலான அவருடைய நூல்கள் உரைநடை நூல்கள்.
[D] 17.09.1953 - அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

23. 'நம்பிக்கைதான் அவரது ஆயுதம், என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து _________ இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார்.
[A] ஹரிஜன்
[B] இந்தியன் ஒப்பீனியன்
[C] தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம்
[D] மேற்கண்ட எதுவுமில்லை.

24. வள்ளியமை எந்த இடத்தில் 23-12-1913 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்?
[A] வால்க்ஸ்ரஸ்ட் [B] ஜோகன்ஸ் பெர்க்
[C] லாஸ் ஏஞ்சல்ஸ் [D] பீட்டர்ஸ்பெர்க்

25.தில்லையாடி என்னும் ஊர் எந்த மாவட்டத்தில் உள்ளது?
[A] திருவாரூர் [B] நாகபட்டினம்
[C] தஞ்சாவூர் [D] சிதம்பரம்

26. கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனம் தனது எத்தனையாவது கிளைக்கு "தில்லையாடி வள்ளியம்மை மாளிகை" எனப்பெயர் சூட்டியது?
[A] 500 [B] 700
[C] 600 [D] 800

27. காந்தியடிகள் தமிழர் மீதும், தமிழ் மீதும் பற்றுக்கொள்ள ஒரு காரணம் _________
[A] திருக்குறள் [B] வள்ளியம்மை
[C] நாமக்கல் கவிஞர் [D] பாரதி

28. தம் சிந்தனை, சொல், செயல் நிலையால் சுத்த சன்மார்க்கியாக, சமயப் பொதுமையாளராக விளங்கியவர் யார்?
[A] திரு.வி.க. [B] தாயுமானவர்
[C] வள்ளலார் [D] முத்துராமலிங்கனார்

29. ராணி மங்கம்மாளின் மகன் யார்?
[A] சொக்கநாத நாயக்கர்
[B] அரங்க கிருட்டின முத்துவீரப்பன்
[C] விஜயநாத நாயக்கர்
[D] விசுவநாத நாயக்கர்

30.'ஓர்ந்து' என்பதன் பொருள் யாது?
[A] இழிந்த நிலை [B] பிணி
[C] எண்ணி [D] மலை

31.தமிழை வளர்க்க வேண்டும் என்றால், பிறமொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளன்று என்று கூறியவர் யார்?
[A] பெரியார் [B] திரு.வி.க.
[C] அறிஞர் அண்ணா [D] பாரதி



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

32. 'நேர்மை' எனும் சிறுகதை நல்லொழுக்க கதைகள் எனும் நூலில் இடம்பெற்றுள்ளது. இதனை எழுதியவர் யார்?
[A] ஆழி.வே. இராமசாமி
[B] லட்சுமி
[C] ஆழி.வே பெரியசாமி
[D] மேற்கண்ட எதுவுமில்லை.

33. சரியாக பொருந்தாதைக் கண்டறி.
[A] அடிதோறும் இருசீர்களைப் பெற்று வருவது - குறளடி
[B] அடிதோறும் முச்சீர்களைப் பெற்று வருவது - சிந்தடி
[C] அடிதோறும் நான்குச் சீர்களைப் பெற்று வருவது - நேரடி
[D] அடிதோறும் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைப் பெற்றுவருவது - நெடிலடி

34. தொடையற்றப்பாட்டு நடையற்றுபோகும் என்பது?
[A] நன்னூல் வழக்கு
[B] தொல்காப்பிய வழக்கு
[C] பழமொழி
[D] பன்னிருப்பாட்டியல்

35. "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்"
என்ற குறளில் பயின்று வந்துள்ள தொடை எது?
[A] மோனைத்தொடை
[B] எதுகைத்தொடை
[C] இயைபுத்தொடை
[D] முரண்தொடை

36. "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின்று மற்றும் பசி" இதில் பயின்றுவந்துள்ள மோனை எது?
[A] கீழ்க் கதுவாய் மோனை
[B] மேற் கதுவாய் மோனை
[C] கூழை மோனை
[D] பொழிப்பு மோனை

37.தொடை________வகைப்படும்?
[A] 6 [B] 7 [C] 8 [D] 9

38. சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, நேரே பொருள் கொள்வது__________ஆகும்.
[A] நிரல் நிறை அணி
[B] உருவக அணி
[C] உவமை அணி
[D] ஏகதேச உருவக அணி

39. அறிவன், கணியன், நாழிகைக்கணக்கர் என்ற சொற்களால் குறிக்கப்படுபவர் யார்?
[A] சூரியன்
[B] புதன்
[C] வானியல் பற்றிக்கணித்துக் கூறுபவர்கள்
[D] வானியல் அறிஞர்

40. [i]அசுவினி என்பது கோள்மீன்
[ii] வியாழன் என்பது நாள்மீன்
[A] [i] மட்டும் சரி
[B] [ii] மட்டும் சரி
[C] இரண்டும் சரி
[D] இரண்டும் தவறு

41. 1000 என்பதற்கு நிகரான தமிழ் எண்(எழுத்து) யாது?
[A] இ [B] சூ [C] வ [D] ளு

42. இரட்சணிய யாத்திரிகம் எழுதியவர் யார்?
[A] கண்ணதாசன்
[B] வீரமாமுனிவர்
[C] எச்.ஏ.கிருட்டினனார்
[D] உமறுப்புலவர்

43. வெவ்விருப்பாணி பிரித்து எழுதுக.
[A] வெம்மை + இருப்பாணி
[B] வெம்மை + இரும்பு + ஆணி
[C] வெவ்விருப்பு + ஆணி
[D] வெப்பம் + இரும்பு + ஆணி

44. ஈண்டினியான் பிரித்து எழுதுக
[A] ஈண்டு + இனியான்
[B] ஈ + இனி + யான்
[C] ஈண்டு + இனி +யான்
[D] ஈண்டி + இனி +யான்

45. 'இருப்பாணி' இலக்கண குறிப்புத் தருக.
[A] பண்புத் தொகை
[B] வினைத்தொகை
[C] உருவகம்
[D] வலித்தல் விகாரம்

46. பின்வருவனவற்றுள் தவறாக பொருந்தியதை தேர்வு செய்க
[A] செற்றம் - சினம்
[B] சுருதிமுதல் - மறைமுதல்வராகிய ஏசு நாதர்

[C] வித்தகன் - ஏமாற்றுபவன்
[D] ஆகடியம் - ஏளனம்

47. எச்.ஏ கிருட்டினனார் பற்றிய தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்க.
[A] 23.04.1827-ல் திருநெல்வேலி கரையிருப்பில் பிறந்தார்.
[B] பெற்றோர் - சங்கர நாராயணர் - தெய்வநாயகி
[C] கிறித்தவக் கம்பரான இவர் 03.02.1900-ல் மறைந்தார்.
[D] பிலவணச் சோதிடரிடம் இலக்கணங்களையும், மாணிக்கவாசகத் தேவரிடம் வடமொழியையும் கற்றார்.

48. இரட்சணிய யாத்திரிகம் பின்வரும் எந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது?
[A] பெரியபுராணம்
[B] பில்கிரிம்ஸ் புரோகிரஸ்
[C] இரகசிய வழி
[D] திருதொண்டர் புராணம்

49.மனிதகுலத்தின் உழைப்பின் மேன்மையைப் பயன்வடிவில் மக்களெல்லாம் ஒன்று கூடித் துய்த்து இன்புறுகின்ற இணையில்லாத் திருநாள்_______
[A] தீபாவளி [B] திருவிழாக்கள்
[C] பொங்கல் [D] புதுவருடப்பிறப்பு

50.பொங்கல் திருவிழா எங்கு மகர சங்கராந்தியாக கொண்டாடப்படுகிறது
[A] கேரளா, ஆந்திரா
[B] ஆந்திரா, கருநாடகா
[C] ஒடிசா, ஆந்திரா
[D] கர்நாடகா, ஒடிசா

51. பொங்கல் திருவிழா எந்தெந்த நாடுகளில் அறுவடை திருவிழாவாக கொண்டாடப்படுகிறது?
[A] இந்தோனேசியா, ஜாவா
[B] ஜாவா, சிங்கப்பூர்
[C] ஜாவா, ஜப்பான்
[D] மொரிசியசு, மலேசியா

52. "நாரதர் வருகிறார்" என்பது என்ன ஆகுபெயர்?
[A] கருத்தாவாகுப் பெயர்
[B] காரியவாகு பெயர்
[C] கருவியாகு பெயர்
[D] உவமையாகு பெயர்

53. கருவிப்பொருளைக் குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்திற்கு ஆகி வருவது______
[A] கருத்தவாகுப் பெயர்
[B] கருவியாகு பெயர்
[C] காரியவாகு பெயர்
[D] உவமையாகு பெயர்

54.செய்யுளின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள்கொள்வது_____எனப்படும்.
[A] அளைமறிபாப்பு பொருள்கோள்
[B] அடி மறிமாற்றுப் பொருள்கோள்
[C] கொண்டு கூட்டுப் பொருள்கோள்
[D] தாப்பிசைப் பொருள்கோள்

55. "இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை"
இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள பொருள்கோள் யாது?
[A] அளைமறிபாப்பு பொருள்கோள்
[B] அடி மறிமாற்றுப் பொருள்கோள்
[C] கொண்டு கூட்டுப் பொருள்கோள்
[D] தாப்பிசைப் பொருள்கோள்

56. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
[A] முகத்தாமரை [B] தேன்மொழி
[C] பவளவாய் [D] முத்துப்பல்

57. 28 என்பது தமிழென்
[A] கஅ [B] உஅ [C] கஎ [D]உ0

58. பாடநூல் ஆசிரியர் பைந்தமிழ் ஆசான் எனப் போற்றப்படுபவர் யார்?
[A]மறைமலை அடிகள்
[B]திரு.வி.க.
[C]பாவணர்
[D]கா.நமச்சிவாயனார்

59.தொடர்நிலைச் செய்யுளும், தூய காப்பியங்களும் இயற்றுபவர் யார்?
[A]ஆசுகவி [B]வித்தாரக்கவி
[C]சித்திரக்கவி [D]மதுரக்கவி

60. துய்ப்பேம் என்பதன் பொருள் யாது?
[A] இழக்க [B] கொடுத்தல்
[C] நுகர்வோம் [D] விலங்கு

61) உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்று கூறியவர் யார்?
[A] ஔவையார் [B] கணிமேதாவியார்
[C] நக்கீரனார் [D] மோசிக்கீரனார்

62. பின்வருவனவற்றுள் தவறாக பொருந்தியதைத் தேர்வு செய்க
[A] தப்புந -இழக்க [B] ஈதல் கொடுத்தல்
[C] மா - விலங்கு [D] நாழி - தொழிற்பெயர்

63. திருமுருகாற்றுப்படை மற்றும் நெடுநல்வாடை ஆகிய இரண்டு நூல்களையும் இயற்றியவர் யார்?
[A] கபிலர்
[B] நப்பூதனார்
[C] பெருங்கௌசிகனார்
[D] நக்கீரனார்

64. "அன்பு செய்யின் அயலாரும் அண்டி நெருங்கும் உறவினராம் அன்பு நீங்கின் உறவினரும் அகன்று நிற்கும் அயலவராம்" என்று கூறியவர் யார்?
[A] உமர்கய்யாம் [B] கவிமணி
[C] உமறுப்புலவர் [D] முடியரசன்

65. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞரான கியாதுதீன் அபுல்பாத் உமர்கய்யாம் கீழ்வரும் எந்தத்துறைகளில் புலமைமிக்கவர்.
[A] ஜோதிடம், கணிதம்
[B] கணிதம், விலங்கியல்
[C] கணிதம், வானவியல்
[D] வானவியல், அறுவை சிகிச்சை

66. கீழ்வருவனவற்றுள், சரியானதைத் தேர்ந்தெடு
[A] கவிமணி தேசிக விநாயகனார் திருநெல்வேலி தேரூரில் 1876 முதல் 1954 ஆண்டு காலகட்டத்தில் வாழ்ந்தார்.
[B] ரூபாயத் நான்கடிச் செய்யுள்
[C] மலரும் மாலையும், அருள்வேட்டல் முதலிய நூல்களை எழுதியுள்ளார்.
[D] கவிமணியின் பெற்றோர் சிவதாணு - லட்சுமி

67. "தேவியும் ஆயமும்" இலக்கணக் குறிப்புத் தருக
[A] உம்மைத் தொகை
[B] முற்றுமை
[C] எண்ணும்மை
[D] பண்புத் தொகை

68. ஆபுத்திரன் நாடு அடைந்த காதை மணிமேகலை காப்பியத்தில் எத்தனையாவது காதை?
[A] 20 [B] 21 [C] 22 [D] 24

69. அரைசன் என்பதன் இலக்கணக் குறிப்புத் தருக?
[A] பண்புத் தொகை [B] வினைத்தொகை
[C] இடைப்போலி [D] உருவகம்

70. 'தண்டமிழ் ஆசான்' என அழைக்கப்படுபவர் யார்?
[A] இளங்கோவடிகள்
[B] சாத்தன் நன்னூற்புலவன்
[C] மணிமேகலை
[D] ஞானசம்பந்தர்

71. மணிமேகலை காப்பியத்தில் அறவணவடிகள் 10 குற்றங்கள் உள்ளதாக குறிப்பிடுகிறார். அந்த பத்து குற்றங்களையும் நாம் எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்.
[A] 3 (உடல், சொல், உள்ளம்)
[B] 2 (உடல், உள்ளம்)
[C] 4 (உடல், சொல், உள்ளம், செயல்)
[D] மேற்காண் எதுவுமில்லை

72. 'பிணிநோயுற்றோர்' பிரித்து எழுதுக
[A] பிணி + நோயுற்றோர்
[B] பிணி நோய் + உற்றோர்
[C] பிணி நோய் உற்று + ஓர்
[D] பிணி + நோய் + உற்றோர்

73. எத்தனை இயல்புகளை அறிந்திருந்தால் மக்களாய் பிறந்தவர் பெரும்பேறு பெற்றவர் என அறவணவடிகள் கூறுகிறார்.
[A]10 [B] 11 [C]12 [D] 13

74. இயல்பீராறு பிரித்து எழுதுக
[A] இயல்பு + ஆறு [B] இயல்பீர் + ஆறு
[C] இயல் + ஆறு [D] இயல்பு + ஈர் + ஆறு

75. 'பசிப்பிணி என்னும் பாவி' எனக் கூறும் நூல் எது?
[A]புறநானூறு [B] மணிமேகலை
[C]சிலப்பதிகாரம் [D] அகநானூறு

76.மருந்து என்னும் அதிகாரம் எந்த நூலில் உள்ளது?
[A] திருக்குறள் [B] திரிகடுகம்
[C]சிறுபஞ்சமூலம் [D] ஏலாதி

77. பின்வரும் எந்த ஒன்று குளிர்ச்சி உண்டாக்கி குருதியை தூய்மைப்படுத்தும்?
[A] சீரகம் [B] கொத்துமல்லி
[C] வெங்காயம் [D] பூண்டு

78. நோய்க்கு முதல் காரணம்?
[A] ஊறுகாய் [B] வடாம்
[C] கருவாடு [D] உப்பு

79. பின்வருவனற்றுள் சரியாகப் பொருந்தியவற்றைக் காண்?



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

[A] தேங்காய் - மணமூட்டி உணவு விருப்பை உண்டாக்கும்
[B] நல்லெண்ணெய் - கண் குளிர்ச்சி, அறிவுத்தெளிவு
[C] சீரகம் - நீர்க் கோவையை நீக்கும்
[D] மஞ்சள் - பித்தத்தைப் போக்கும்

80. காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோன் காலைத்தொட்டுக்
கும்பிட்டுக் காலன் ஓடிப் போவானே
எனக் கூறியவர் யார்?
[A] திருமூலர் [B] சித்தர்கள்
[C] கவிமணி [D] காந்தியக் கவிஞர்

81. பின்வருவனவற்றுள் எது தவறாகப் பொருந்தியுள்ளது?
[A] துவர்ப்பு - ஆற்றல்
[B] உவர்ப்பு - தெளிவு
[C] புளிப்பு - இனிமை
[D] கார்ப்பு - மென்மை

82. சிங்கவல்லியை, ஞானப்பச்சிலை என போற்றியவர் யார்?
[A] தாயுமானர் [B] வள்ளலார்
[C] திருமூலர் [D] சித்தர்கள்

83. குமரி எனக்குறிக்கப்படுவது எது?
[A] கற்றாழை [B] குப்பை மேனி
[C] தூதுளை [D] முருங்கைக்கீரை

84. முறிந்த எலும்பு விரைவில் கூட நாம் எதனை அரைத்துக் கட்டவேண்டும்.
[A] புளியம் பட்டை
[B] வேம்புப் பட்டை
[C] முருங்கைப்பட்டை
[D] வாழைப்பட்டை

85. கரிசாலை, கையாந்தரை, பிருங்காராசம், தேகராசம் உள்ளிட்ட பெயர்களில் அழைக்கப்படும் கீரை எது?
[A] மணத்தக்காளி
[B] கரிசலாங்கண்ணி
[C] அகத்திக்கீரை
[D] வல்லாரை

86. நின்ற சீரின் ஈற்றசையும் வரும் சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது_____எனப்படும்.
[A] அடி [B] சீர்
[C] தளை [D] அசை

87. தளை எத்தனை வகைப்படும்?
[A] 5 [B] 8 [C] 9 [D] 7

88. பின்வருவனவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடு?
[i] மாமுன் நேர் வருவது நேரொன்றாசிரியத்தளை
[ii] விளமுன் நிரை வருவது நிரையொன்றியாசிரியத்தளை
[iii] காய்முன்நேர் வருவது இயற்சீர் வெண்டளை
[iv] கனிமுன்நிரைவருவது கலித்தளை
[A] [i] , [ii] மட்டும் சரி
[B] [ii] , [iii] மட்டும் சரி
[C] [iii], [iv] மட்டும் சரி
[D] [i] , [iv] மட்டும் சரி

89. பழனிப்பதிப்பகம், குமரகுரு பதிகம், சிவகிரிப்பதிகம் முதலிய நூல்களை எழுதியவர் யார்?
[A] கா. நமச்சிவாயனார்
[B] மாம்பழக்கவி சிங்கநாவலர்
[C] ஆழி.வே.ராமசாமி
[D] முடியரசன்

90. தமிழ் மருந்துகள் என்னும் நூலை எழுதியவர் யார்?
[A] மாம்பழக்கவி சிங்கநாவலர்
[B] கா.நமச்சிவாயனார்
[C] ரா.பி. சேதுப்பிள்ளை
[D] கி.ஆ.பெ.விசுவநாதம்

91. 'செல்வத்துப்பயனே ஈதல்' எனக்கூறும் நூல் எது?
[A] அகநானூறு [B] புறநானூறு
[C] குறுந்தொகை [D] பதிற்றுப்பத்து

92. 'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே' எனக்கூறுபவர் யார்?
[A] தேவகுலத்தார் [B] மோசீக்கிரனார்
[C] நக்கீரனார் [D] கணிமேதாவியார்

93. பின் வருவனவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடு?
[A] குறுந்தொகை அடி வரையறை- 4 முதல் 9 வரை
[B] ஆரளவு-ஆறு+அளவு
[C] நீரினும் -உயர்வுச் சிறப்பும்மை
[D] குறுந்தொகைத் தொகுத்தவர் - பெருந்தேவனார்

94. குளிர்பதனப் பெட்டியில் பயன்படுத்தப்படும் ________ வளிப்படலத்தைச் சிதைப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.
[A] குளோரோ கார்பன்
[B] நைட்ரஜன்
[C] ஆர்கான்
[D] குளோரோஃபுளூரோ கார்பன்

95. தொடைவிகற்பம் எத்தனை வகைப்படும்?
[A] 32 [B] 33 [C] 34 [D] 35



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

96. கீண்டு என்பதன் பொருள் யாது?

[A] துன்பமடைந்து [B] பிளந்து

[C] காப்பவர் [D] ஆணியின் நுனி

97. அயராதே! எழுந்திரு நீ! இளந்தமிழா, அறஞ் செய்வாய்! என்று கூறியவர் யார்?

[A] பாரதிதாசன் [B] பாரதியார்

[C] திரு.வி.க [D] கவிமணி

98.'டிபாரட்மெண்டல் ஸ்டோர்' என்பதன் தமிழாக்கம் யாது?

[A] அங்காடி [B] பலபொருள் அங்காடி

[C] பெரிய அங்காடி [D] கடைத்தெரு

99. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க?

[A] உம் [B] என்று

[C] கொல் [D] உறு

100. 'தான்' என்பது 'கண்' எனும் வேற்றுமை உருபை ஏற்கும் போது எவ்வாறு திரியும்?

[A] தன்னின் [B]தன்கண்

[C]தனது கண் [D]தன்னின் கண்



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com